www.tamilarangam.net

# தோழர் பத்மநாபாவின் 44வது பிறந்த தின நினைவு நாள்

ஒரு மனிதனின் உதிர்ப்பு...!
இது மனிதத்தின் உயிர்ப்பு...!



**கார்த்திகை 19**

நம்மவரே! நண்பரே! நம் தோழரே...!

**«நாம் மக்களுக்காகவே மண்ணை நேசிக்கிறோம். மக்களில்லாத மண்ணை நாம் நேசிக்கவில்லை...!»**
என்று கூறினீர்கள் அன்று. ஆனால் மக்களை நேசிக்காமல் வெறும் மண்ணை நேசித்தவர்களுக்கு காலம் அளித்த பதில்
இன்று நம் தேசத்தில் மக்களும் இல்லை...! மண்ணும் இல்லை!

செய்தி: யாழ் குடாநாட்டில் வாழும் எட்டு இலட்சம் மக்களில் நான்கு இலட்சம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்வு.
பிந்திய செய்தி: கோப்பாயிலும் இராணுவம் கைப்பற்றியது.

«திரு. பத்மநாபா அரசியலில் இடதுசாரி மனப்பான்மை உடையவர் என்பதால் அவரை நேசித்தேன். அவர் கொண்ட அரசியல் கொள்கையிலும், அவர் நம்பிக்கை வைத்திருந்த ஆயுதப் புரட்சியிலும் எனது நிலை எதுவாயினும் தமிழினத்தின் உரிமை வாழ்வில் அவர் கொண்டிருந்த உறுதி என்னைப் பெரிதும் கவர்ந்தது. ராஜீவ்–ஜெயவர்த்தனா உடன்படிக்கைப்படி உருவான தமிழ் மாகாணத்திற்கு முதலமைச்சராக வந்திருக்க வேண்டிய திரு. பத்மநாபா பதவிப் பொறுப்பு ஏற்க மறுத்தமையும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. அதன் பின்னர் அவரை அதிகமாகநேசிக்கலானேன். தமிழகத்தின் மகளை மணந்த என் தாயகத்தின் மாப்பிள்ளை அவர்.»

– அமரர் மா.பொ.சி. –

«தோழர் பத்மநாபன் பெருமை நீடித்து நிலவட்டும். அவரின் இலட்சியமும் அவரால் விடப்பட்ட கடமைகளும் நிறைவேற்றப்படட்டும். அவரை நாம் நன்றியுடனும் அன்புடனும் தோழமையுடனும் எப்போதும் நினைக்கிறோம். அவரால் பெற்ற பலத்தோடு மனவளர்ச்சியை ஸ்தாபித்து நாம் எம்முள் வளர்ப்போம். தோழர் நாபாவின் உடம்போடு அவரது சிறப்புக்கள் அவர் கொண்டிருந்த இலட்சியமெல்லாம் போய்விடவில்லை என்பதைக் கொலைகாரர்களும் தெரிந்துகொள்வார்கள்.»

– தோழர்கள் –

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**
– சர்வதேசக் கிளைகளின் ஒன்றியம் – **EPRLF**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்